**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 90** **நாள் : 01.05.2024**

பெருநகர சென்னை மாநகராட்சி, வாகன நிறுத்தக் கட்டணம் வசூல் செய்யும் பணியை தனியார் மூலம் மேற்கொள்ளப்பட்டு, ஒப்பந்தம் முடிவடைந்த நிலையில், புதிய ஒப்பந்ததாரரை நியமனம் செய்யும் வரை (1) மெரினா கடற்கரை சர்வீஸ் ரோடு, (2) ரட்டன் பஜார், ஜார்ஜ் டவுன், (3) அண்ணா நகர் 2-வது அவென்யூ, (4) என்.எஸ்.சி. போஸ் ரோடு, (5) பெசண்ட் நகர் 6-வது அவென்யூ, (6) காதர் நவாஸ்கான் ரோடு, நுங்கம்பாக்கம், (7) புரசைவாக்கம் நெடுஞ்சாலை, (8) ஜி.என்.செட்டி ரோடு, தி.நகர், (9) தெப்பக்குளம், மைலாப்பூர், (10) மெக்.நிக்கலஸ் ரோடு, சேத்துப்பட்டு ஆகிய தேர்ந்தெடுக்கப்பட்ட இடங்களில் வாகன நிறுத்தக் கட்டணம் வசூல் செய்யும் பணியை பெருநகர சென்னை மாநகராட்சி மன்றத் தீர்மானத்தின்படி தமிழ்நாடு அரசு நிறுவனமான தமிழ்நாடு முன்னாள் படைவீரர் கழக (TEXCO) நிறுவனத்தின் பணியாளர்களைக் கொண்டு மேற்கொள்ள ஆணை வழங்கப்பட்டு 22.07.2024 முதல் வாகன நிறுத்தக் கட்டணம் வசூலிக்கப்பட்டு வருகிறது.

மேற்படி, TEXCO நிறுவனம், ஒரு மணி நேரத்திற்கு இருசக்கர வாகனத்திற்கு ரூ.5/-ம் நான்கு சக்கர வாகனத்திற்கு ரூ.20/-ம் பேருந்து மற்றும் வேன்களுக்கு ரூ.60/-ம் என்ற கட்டண அடிப்படையில் கையடக்க கருவி (Handheld device) மூலமாக UPI, Debit Card மற்றும் Credit Card போன்ற டிஜிட்டல் முறை பணபரிவர்த்தனை (Digital payment) வாயிலாக வாகன நிறுத்தக் கட்டணம் வசூல் செய்யப்பட்டு கட்டணத் தொகை நேரிடையாக இந்தியன் வங்கி, ஜார்ஜ் டவுன் கிளையில் உள்ள வங்கி கணக்கில் வரவு வைக்கப்படுகிறது.

மேற்கண்ட TEXCO நிறுவன பணியாளர்கள் மீது நாளிதழில் புகார் தெரிவித்த நிலையில், அது குறித்து விசாரணை மேற்கொண்டு அறிக்கை அனுப்ப TEXCO நிறுவனத்தைக் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

வாகன நிறுத்தக் கட்டணம் வசூல் செய்யப்படும் பணியினை ஒழுங்குமுறைப்படுத்துவதற்காக மென்பொருளில் (Software) கீழ்க்கண்ட திருத்தங்கள் ஒரு சில தினங்களில் மேற்கொள்ளப்படும்.

(1) வாகன நிறுத்தக் கட்டணம் வசூல் செய்யப்பட்டதற்காக வழங்கப்படும் ரசீதில் வாகனத்தின் பதிவு எண். பதிவு செய்வது கட்டாயமாக்கப்படும்.

(2) QR code மூலமாக ரசீதின் உண்மைத்தன்மையை கண்டறிய வழிவகை செய்யப்படும்.

(3) பணப்பரிவர்த்தனை மூலமாக கட்டணம் செலுத்தும் முறையினை கையடக்க கருவியிலிருந்து ரத்து செய்ய நடவடிக்கை எடுக்க இந்தியன் வங்கிக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேலும், வாகன நிறுத்தக் கட்டணம் வசூல் செய்யும் பணியாளர்களுக்கு கீழ்க்காணும் வழிமுறைகளை கட்டாயமாக பின்பற்ற அறிவுறுத்தப்பட்டுள்ளது.

(1) தமிழ்நாடு முன்னாள் படைவீரர் கழகத்தின் பணியாளர்கள் வாகன நிறுத்தக் கட்டண வசூல் பணி மேற்கொள்ளும்போது உரிய அடையாள அட்டை (Identity card) அணிந்திருக்க வேண்டும்.

(2) தமிழ்நாடு முன்னாள் படைவீரர் கழகத்தின் பணியாளர்கள் வாகன நிறுத்தக் கட்டண வசூல் பணி மேற்கொள்ளும்போது உரிய பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் தமிழ்நாடு முன்னாள் படைவீரர் கழக சின்னம் பொறிக்கப்பட்ட மேலங்கி (Over Coat) அணிந்திருக்கவேண்டும்.

பொதுமக்கள் வாகன நிறுத்தக் கட்டணம் செலுத்தும்போது, பணத்திற்கு பதிலாக டிஜிட்டல் வழியாக மட்டுமே கட்டணம் செலுத் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு ஒத்துழைக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

மேலும், வாகன நிறுத்தக் கட்டணம் வசூல் தொடர்பாக ஏதேனும் புகார் தெரிவிக்க விரும்பினால். பெருநகர சென்னை மாநகராட்சியின் பொதுமக்கள் புகார் மையத்தில் (Public Grievance Cell) கட்டணமில்லா தொலைபேசி எண். 1913 வாயிலாக தெரிவிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

செய்தி வெளியீடு : இணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,
பெருநகர சென்னை மாநகராட்சி.